புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

எண்.04/போ.துறை/2014 தேதி :25-06-2014

## செய்திக் குறிப்பு

### அதிகப்படியான மாணவ மாணவியரை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மீது நடவடிக்கை

புதுச்சேரி அரசு போக்குவரத்துத் துறை புதுச்சேரியில் இயங்கும் பள்ளி / கல்லூரி வாகனங்களின் தகுதிச் சோதனை கடந்த மாதம் நடத்தியது. அதில் பங்கெடுத்துக்கொள்ளாத வாகனங்களை கண்டறிவதற்காக கடந்த 24-06-2014 அன்று புதுவையில் சில இடங்களில் களப் பரிசோதனை செய்யப்பட்டது. அதன்படி 26 பள்ளி/கல்லூரி வாகனங்கள் உட்பட 30 வாகனங்களுக்கு ஆய்வறிக்கை அளிக்கப்பட்டது. அவற்றில், ஆவணங்கள் இல்லாத பேருந்துகள், அதிகப்படியான மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் கண்டறியப்பட்டு மேல் நடவடிக்கைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இத்தகைய சோதனைகள் தொடர்ந்து புதுச்சேரியில் பல இடங்களில் நடத்தப்படும். தவறு செய்யும் பள்ளி / கல்லூரி வாகனங்கள் மீது மோட்டார் வாகனச் சட்ட விதிகளின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாகன ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமமும் ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளி / கல்லூரி மாணவர்களுக்காக இயங்கும் வாகனங்களில் அளவுக்கதிகமான மாணவர்களை ஏற்றிச்செல்வதை தவிர்க்கும் வகையில் போதிய புதிய பள்ளி/கல்லூரி வாகன அனுமதிகளை (Permit) வழங்க புதுச்சேரி போக்குவரத்துத் துறை தயாராக உள்ளது. எனவே, பள்ளி / கல்லூரி நிறுவனங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு புதிய பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தமது மாணவ / மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப தமது வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் புதுச்சேரி போக்குவரத்துத் துறை கேட்டுக்கொள்கிறது.

GOVT. OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்